[1982 மார்ச் 3

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே ஒரு தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள். இது வடிகால் அல்ல, ஒரு வாய்க்கால். இந்த வாய்க்கால் 1974–75-ல் வெட்டப்பட்டு, ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்யப்பட்டு, நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி அளித்தது. இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னால் இந்த வாய்க்கால் சில சமூக விரோதிகளால் தூர்க்கப்பட்டு, அதனால் 2, 3 கிராமங்கள் பாசன வசதியற்று இருக்கின்றன. பொதுப் பணித் துறையினர் அந்த சமூக விரோதிகள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அந்தக் கிராமங்கள் இப்போது வறட்சியால் பாதிக்கும் நிலை இருக்கிறது. எனவே அந்தக் கிராமங்களுக்கு மீண்டும் பாசன வசதி அளிக்க அந்த வாய்க்கால் புதுப்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, என்னிடம் இருக்கிற குறிப்பின்படி, தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், திருவள்ளியங்குடி, நரிக்குடி கிராமங்களுக்கான வடிகால் இது. இந்த விவரத்தைத்தான் கொடுத்து இருக்கிறார்கள். இது தவறான தகவல் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதினால் திரும்பவும் ஒரு கருத்தைப் பெற்றுதான் பதில் சொல்ல முடியும். இதிலே தவறு நடந்து இருக்கிறது என்று சொன்னார்கள். அது விதிமுறைகளின்படி கவனிக்கப்படும். 1982–83-ல் இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ள இருக்கிறோம். அதற்கா மகிழ்ச்சி அடைவார்கள் என்று கருதுகிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, இந்த வாய்க்காலுக்கான மதிப்பீடு சாங்ஷன் செய்யப்பட்டுவிட்டதா, எவ்வளவு மதிப்பீடு, இந்தத் திட்டத்தை இந்த ஆண்டே நிறைவேற்றித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, இது சம்பந்தமான மானியக் கோரிக்கை வரும்போது பதில் சொல்கிறேன்.

திருவள்ளூர் அருகே சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம்.

*வினா எண். 336—திரு. பெ. சு. திருவேங்கடம், திரு. இரா. சண்முகம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க் ண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் திருவள்ளூர் அருகே புதிய சர்க்கரை ஆலை நிறுவ அரசு ஆலோசித்துக் கொண்டுள்ளதா ?

1982 மார்ச் 3]

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

(இ) அதற்கு அரசு செலவிடும் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ), (ஆ) மற்றும் (இ) : தலைவரவர்களே, ஆம். நாள் ஒன்றுக்கு 1,852 டன் பிழிதிறன் கொண்ட சர்க்கரை ஆலை ஒன்று அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக மத்திய அரசிடம் உரிமம் எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மதிப்பீடு ரூபாய் 8 கோடி.. இதில் மாநில அரசின் பங்குத் தொகை சுமார் 2 கோடி ரூபாய்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, திருவள்ளூருக்கு அருகே அமைக்கப்பட இருக்கிற இந்த சர்க்கரை ஆலைக்கான அனுமதியைப் பெற மத்திய அரசுக்கு எழுதி இருப்பதாகச் சொல்கிறார்கள். மத்திய அரசிலிருந்து எப்போது அனுமதி கிடைக்கும் ? அந்த ஆலையை ஆரம்பிக்கும்போது எவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் ? இப்படிப் பட்ட ஆலைகளை தமிழகத்தில் பல்வேறு இடங்களில் அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, இதில் மத்திய அரசின் உரிமம் எதிர்பார்க்கப்படுகிறது. எப்போது கிடைக்கும் என்று தெரியவில்லை. உரிமம் கிடைத்த உடன் ஆலை அமைக்கும் பணி ஆரம்பிக்கப்படும். சுமார் 1,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

திரு. இரா. சண்முகம் : தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் திருவள்ளூருக்கு அருகே தொடங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் திருத்தணி தொகுதி, திருத்தணி தாலுகாவில் திருவாலங்காடுக்குப் பக்கத்தில் தொடங்கப்படுவதாக ஏற்கனவே சொல்லப்பட்டது அது அங்கு தொடங்கப்படுமா ? அல்லது திருவள்ளூருக்கு அருகே தொடங்கப்படுமா ? தொடங்கும் பணி எப்போது ஆரம்பிக்கப் படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, திருவள்ளூருக்கு அருகே, திருவள்ளூர்—அரக்கோணம் சாலையில் திருவாலங்காடுக்குப் பக்கத்தில் தொடங்குவது என்று இப்போது முடிவு செய்யப்பட்டிருக்கிறது.